
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1000

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

திரைக்கதை வசனம்
கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

34

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# மனசாட்சியைத் தட்டி எழுப்பிய பூமாலை!

1950-1960-களில் பெண்கள் மீது இந்தச் சமூகத்தால் சுமத்தப்பட்டிருந்த துன்பச் சுமைகளையெல்லாம் கலைஞர் - கதை, திரைக்கதை, வசனம் என தான் எழுதிய திரைப்படங்களின் மூலம் எடுத்துக்காட்டி, தமிழ்ச் சமூகத்தின் கண்களைத் திறக்கவும், மனச்சாட்சியைத் தட்டி எழுப்பவும் முயன்றார். அவ்வாறான முயற்சியாகப் படைக்கப்பட்ட திரைப்படங்களில் ஒன்றாகத் தொடுக்கப் பட்டதுதான் இந்தப் 'பூமாலை'.

திரைப்படத்தின் தொடக்கக் காட்சியிலேயே, தனது கம்பீரக்குரலில் தமிழ்நாட்டுப் பெண்களின் துயர் துடைக்கப்பட வேண்டிய தேவையைப் பற்றி எடுத்துக்கூறுவார் கலைஞர்.

### திரைக்கு முன் உரை

"பூமாலை, புது நிலவு, கோலமயில், கூவும் குயில் என்றெல்லாம் புகழப்படும் மங்கையர் உலகில் சீதையின் சோகம், பாஞ்சாலியின் துயரம், அகல்யாவின் வாட்டம், சகுந்தலையின் ஏமாற்றம், சந்திரமதியின் சங்கடம், தமயந்தியின் துக்கம், கண்ணகியின் குமுறல், மாதவியின் துறவு இப்படிக் கண்ணீர் பொழியும் பெண் குலத்தின் நீண்டகாலச் சோக வரலாற்றைப் பழம் புராணங்களும் தமிழ் இலக்கியங்களும் நமக்கு நினைவூட்டுகின்றன. இயற்கையின் மென்மையான படைப்பு பெண்மை. அதைத் தனக்குச் சாதகமாகப் பலவீனமாக்கிக் கொண்டு வெற்றி காண முனையும் சமுதாய அமைப்பில் அடிமைப்படுத்துதல், உரிமை பறித்தல், ஏமாற்றுதல், களங்கப்படுத்துதல் ஆகிய கொடுமைகளுக்கெல்லாம் ஆண்டாண்டுகாலமாக ஆட்பட்டு வருகிறது பெண்ணினம்.



கணநேரம் மின்னலிடும் வெறி உணர்ச்சி நல்லவர்களைக்கூட சமுதாயத்தைக் கெடுக்கும் நச்சு மரமாக்கிவிடுகிறது. அவ்விதம் மாசுபடுத்தப்பட்ட பெண்களுக்கு வாழ வழியில்லாமல், நல்ல பாதையின் கதவுகள் அனைத்தும் அடைக்கப்பட்டு விடுகின்றன. மணமுறிந்த கன்னி மலர்களை மீண்டும் மணம் கமழ்ந்திடச் செய்திடல் வேண்டும். அவர்களுக்கு வாழ்வு வழங்கிடல் வேண்டும் என்று உலக உத்தமர் காந்தியார் நவகாளி கொடுமையின்போது வெளியிட்ட கருத்து, புவியில் எந்தக் காலத்துக்கும் பொருந்துகின்ற பொன்னான கருத்து.

தொடர்ந்து சொல்லப்பட்டு வரும் 'கலை புனிதமானது, கலையில் அரசியல் கலக்கக்கூடாது. கலை கலைக்காகவே' இயங்க வேண்டும் என்ற மிகப்பெரிய பித்தலாட்டவாதத்திற்கான பதிலை மிகவும் நயமாகவும், எளிய முறையிலும் மரகதம் (அஞ்சலி தேவி) கதாபாத்திரம் வாயிலாக மிகவும் அற்புதமாகக் கேட்டிருப்பார் கலைஞர்.



### பூமாலை பறித்த கதை

மற்றொரு காட்சியில், சுந்தரம், மங்களபுரத்தில் நடைபெற்ற தனது நண்பன் மோகனின் திருமணத்தில் குடித்துவிட்டு, மது வெறியில் ஒரு பெண்ணைப் (பூமாலையை) பாலியல் வன்முறை செய்த நிகழ்வினைத் தனது நண்பன் ரவியிடம் சொல்லும் காட்சியில் கலைஞர் இவ்வாறு எழுதுகிறார்.


**சுந்தரம்:** நாட்டியக்காரி நளினா இரவு ஒரு மணிக்குப் போய்விட்டாள் என்று மட்டுமே எனக்குத் தெரிந்தது. அப்படியானால், இந்தப் பயங்கர மிருகத்துக்குப் பலியாகிவிட்ட அந்தப் பாவை யார்? யார்? அறிந்து கொள்ளத் துடித்தேன். மறுபடியும் மாடிக்குச் சென்றேன். முதல் தடவை மாடிப்படி ஏறியபோது உலகம் எனக்குத் தூசு. நீதி, நேர்மை, தர்மம் என் காலடியில். ஆனால், இரண்டாவது முறை அந்த மாடிப்படிகளில் நான் கால் வைக்கும்போது உலகம் என் தலையில் ஓங்கிக் குட்டிக்கொண்டே இருந்தது. அவளிடம் மன்னிப்புக் கேட்கலாம், அவள் காலில் விழுந்து கெஞ்சி அவளையே என் மனைவியாக்கிக் கொண்டு, அவளுக்கு ஏற்படுத்திய களங்கத்தைப் போக்கலாம் என்று உள்ளே நுழைந்தேன். அவள்...

> **பெண்ணினத்தின் கண்ணீரைத் துடைப்பதற்காக, விடுதலைக்காக, நலனுக்காக பேசியும், எழுதியும் வந்த கலைஞர் அதிகாரம் கையில் கிடைத்தபோது திட்டங்கள் பல தீட்டி பெண்களை முன்னேற்றிக் காட்டவும் செய்தார்.**

அந்தக் கருத்தின் பின்னணியில் பிறந்த கதையை மய்யமாக வைத்து, முற்றிலும் தமிழ்ப் பண்பாட்டுக்கு உரிய முத்திரைகளோடு கலைத்தாயின் காலடியில் அணிவிக்கப்படுவதே இந்தப் பூமாலை" என உரையாற்றியிருப்பார்.

### தனித்துவமான மொழிநடை

அதுமட்டுமல்ல, திரைப்படத்தின் தொடக்கம் முதல் இறுதிவரை ஒவ்வொரு காட்சியிலும் தனது தனித்துவமான மொழிநடையில், முத்திரை பதிக்கும் வசனங்களை எழுதியிருப்பார். கதாநாயகன் சுந்தரத்தின் வீட்டுக்கு அவனது நண்பன் ரவி வரும்போது நடைபெறும் உரையாடலில்,



படங்கள் உதவி : ஞானம்

ரவி : பிறகு

**சுந்தரம்:** கசங்கிய மலர்கள், உடைந்த வளையல் துண்டுகள், சிதறிப்போன விளக்கு இவைகளைத்தான் கண்டேன். மிருக வெறி, எதைப் பற்றியுமே கவலைப்படாதது. என் வெறி, கலையும் வரையில் அவள் போட்ட சத்தம் எனக்கு சங்கீதமாகவே இருந்தது. அந்த நாசத்தில் இருந்து விடுபட, அவள் நகங்களால் என்னைப் பிராண்டினாள். அய்யோ, அந்தப் பெண்ணுக்கு ஆண்டவன் புலியின் நகங்களைக் கொடுத்திருக்கக் கூடாதா? என் மார்பைக் கிழித்து என்னைப் பிணமாக்கிவிட்டு, அவள் மானத்தைக் காப்பாற்றிக் கொண்டிருப்பாள். கடவுளே, இனிமேலாவது பெண்களுக்குச் சிங்கத்தின் பற்களைக் கொடுத்துவிடு, புலியின் நகங்களைப் படைத்துவிடு. மதயானையின் பலத்தை உண்டாக்கி விடு... என் போன்ற காமவெறிக் கழுகுகளிடமிருந்து அந்த அபலைப் பெண்களைக் காப்பாற்று, கடவுளே காப்பாற்று.... காப்பாற்று என்று கதறி அழுகிறான்.

இதைப் போலவே, மங்களபுரத்தில் தனக்கு நேர்ந்த கொடுமையை, தனது கணவனான சுந்தரத்திடம் பூமாலை எடுத்துச்சொல்லும் காட்சியும் அதற்கு சுந்தரத்தின் மறுமொழியும் சாட்டையடியாக இருக்கும்.

**பூமாலை:** அத்தான், மங்களபுரம் என்றொரு ஊர் இருக்கிறதே அது உங்களுக்குத் தெரியுமா? அத்தான், பேர்தான் மங்களபுரம், எனக்கு அமங்கலத் திருவிழா நடந்தது அங்குதான். ஆருயிர் தோழி ஒருத்தி, கல்லூரிச் சினேகிதி, அவளுக்குத் திருமணம் அங்கே. அழைப்பிதழ் அவள் கல்யாணத்திற்கு. நான் போனது என் கருமாதிக்கு! என் தோழி லீலா, திருமணத்திற்கு மனிதர்களுக்கு மாத்திரம் அல்லாமல் மிருகங்களுக்கும் பத்திரிக்கை அனுப்பிவிட்டாள் போலும். பாவி, பழிகாரி, அவள் செய்த தவறு அன்று இரவு என்னை ஒரு மிருகம் வளைத்துக் கொண்டது. நடனமாட வந்திருந்த நளினாவும் நானும் ஒரே அறையில் தங்கி இருந்தோம். இரவு ஒரு மணிக்கு அந்த நளினா போய் விட்டாள்" எனக் கதறுவாள்.

அதற்கு சுந்தரம், மீதிக் கதையை நான் சொல்கிறேன் என அன்று பூமாலையிடம் அத்துமீறிய கதையைச் சொல்லி விட்டு, 'நான்தான் அந்த மனித மிருகம், எனக்கு தண்டனை கொடு' என நிற்பான். அதற்கு பூமாலை, அத்தான்... எனத் தயங்கி நிற்பாள்.

ஆனாலும் சுந்தரம் குற்ற உணர்ச்சி கொண்டவனாக பூமாலையிடம் மன்றாடுவான்.

**சுந்தரம்:** சொன்னபடி செய். காறித்துப்பு. எந்தவிதத் தவறும் செய்யாத உங்களைப் பழிக்கு ஆளாக்கிவிட்டு குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் இந்தக் கொடியவனுக்குத் தண்டனை கொடுங்கள். தண்டனை கொடுங்கள் என்று உயிரிழந்த மரகதத்தின் காலடியில் விழுந்து கதறி அழுவான். அப்போது ஆனந்தன் அவனைத் தேற்றி, உன்னுடைய பயங்கரச் செய்கையால் ஏற்பட்ட விளைவு, பலரது வாழ்வையும் பாழ்படுத்தி இருப்பதைச் சிந்தித்துப் பார் என அறிவுரை சொல்வான்.

இவ்வாறு பெண்ணினத்தின் கண்ணீரைத் துடைப்பதற்காக, விடுதலைக்காக, நலனுக்காகப் பேசியும், எழுதியும் வந்த கலைஞர், அதிகாரம் கையில் கிடைத்தபோது திட்டங்கள் பல தீட்டி பெண்களை முன்னேற்றிக் காட்டவும் செய்தார். அந்த மாமனிதர் படைத்த திரைக்காவியம்தான் பூமாலை!

**...காட்சி விரியும்**

## 'கைப்பாவையாக மாறிய லோக்பால்!'

'இந்தியர்களாக இருந்தால், இந்திய தயாரிப்புகளையே வாங்கவும்' என சமீபத்தில், ஒரு நிகழ்ச்சியில் பேசினார் பிரதமர் மோடி. இந்தியா மிகப்பெரிய சந்தை என வெளிநாட்டு நிறுவனங்களை இந்தியாவுக்கு அழைக்கும் பிரதமர், வெற்று முழக்கமாக இந்தியத் தயாரிப்புகள் எனப் பேசுகிறார் என சமூக வலைதளங்களில் அரசியல் நோக்கர்கள் விமர்சனம் செய்திருந்தனர். அந்த முழக்கத்தை ஒன்றிய அரசே கடைபிடிக்கவில்லை என்பது சமூக வலைதளங்களில் பேசுபொருளாக உள்ளது.

பிரதமர், ஒன்றிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் மீதான ஊழல் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் கொண்டது லோக்பால் அமைப்பு. உச்ச நீதிமன்ற மேனாள் நீதிபதி ஏ.எம்.கான்வில்கர் தலைமையில், 6 உறுப்பினர்களுடன் இந்த அமைப்பு தற்போது செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், லோக்பால் அமைப்பு அதன் தலைவர் உட்பட 7 உறுப்பினர்களுக்கும் ஆடம்பரமான பி.எம்.டபிள்யூ 3 சிரீஸ் 330 லி ரக கார்கள் வாங்க கடந்த 16–ஆம் தேதி ஒப்பந்தப் புள்ளி வெளியிடப்பட்டது. கார் ஒன்றின் விலை சுமார் ரூ.70 லட்சம் வீதம் பிற செலவுகள் உட்பட மொத்தம் ரூ.5 கோடிக்கு 7 கார்கள் வாங்கப்பட உள்ளன.

ஊழல் புகார்களை விசாரிக்கும் அமைப்பான லோக்பால் உறுப்பினர்களுக்கு 5 கோடி ரூபாயில் சொகுசு கார்கள் அவசியமா? என்ற கேள்வியை எதிர்க்கட்சிகள் எழுப்பியுள்ளன. அப்படியே சொகுசு கார் வாங்குவதாக இருந்தாலும், பி.எம்.டபிள்யூ நிறுவனத்திடம் இருந்து வாங்குவது, பா.ஜ.க. கடந்த 10 ஆண்டுகளாக பேசிக்கொண்டிருக்கும் சுதேசி முழக்கத்திற்கு எதிரானது அல்லவா என்றும் கேள்விகள் எழுந்துள்ளன. லோக்பால் அமைப்பை உருவாக்க வேண்டும் என்கிற ஆரவாரத்துடன் அரசியல் மேடைக்கு வந்த பா.ஜ.க., இன்று அந்த அமைப்பினையும் கைப்பாவையாக மாற்றியுள்ளது என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### நாவலர் தொடங்கிவைத்த கிளைக் கழகம்!



என்.ஏ.இ.அஜீஸ்கான்

1970-ஆம் ஆண்டில், இன்றைய சிவகங்கை மாவட்டம், இளையான்குடி புதூரில் எனது சகோதரர் முகம்மீறன் முயற்சியில் இஸ்லாமிய இளைஞர்கள் ஒன்று சேர்ந்து, கழகக் கிளையைத் தொடங்கினோம். தொடக்க விழாவுக்கு, நாவலர் அவர்கள் வருகை தந்தார். அன்றைய எம்.எல்.ஏ. மலைக்கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அன்று எனக்கு 30 வயது. இன்று 80 வயதிலும் கழக உணர்வில் தடம் மாறாமல் பணியாற்றி வருகிறேன். இந்தப் புகைப்படம், இப்போதும் என்னை உற்சாகமாக உணர வைக்கும்.

– என்.ஏ.இ.அஜீஸ்கான்,
திருவல்லிக்கேணி,
சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 1957 தேர்தல் அறிக்கை!

10.02.1957 அன்று சென்னை சேத்துப்பட்டில், தேர்தல் சிறப்பு மாநாட்டை நடத்தியது கழகம். ராயபுரம் அறிவகத்தில் இருந்து புறப்பட்ட ஊர்வலத்தில், உதயசூரியன் சின்னம் அலங்கரிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது. மாநாட்டில் பேரறிஞர் அண்ணாவின் நிறைவுரைக்கு முன்னதாக, 22 தலைப்புகள் கொண்ட முதல் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131